இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

# முன்னோடி வினாத்தாள்

# மட்டம் 03

# 3803 - இடர், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (RCA)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

# 3803 – இடர், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (RCA)

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்
விடையெழுத : 03 மணித்தியாலம்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C.
- பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 20 |
| பகுதி B | 30 |
| பகுதி C | 50 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

**விடைகள்:**

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைத்தாள் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

**விடைத்தாள் புத்தகம்:**

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும்.
- மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01***

**Millennium Tech Ltd.** என்பது விரைவாக வளர்ந்து வரும் ஒரு தொழினுட்ப நிறுவனமாகும். இந்நிறுவனம் தன்னை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் (CSE) பட்டியலிடுவதற்கான முன்னாயத்தமாக அதன் நிறுவன ஆளுகை முறைமையை வலுப்படுத்தும் செயன்முறையில் இறங்கியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிறுவன ஆளுகையின் ஏதாவது இரண்டு (02) பிரதான கூறுகளைப் (key components) **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(b) இடர் முகாமைத்துவக் குழுவின் வகிபாகத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

***வினா 02***

**Greentech PLC** என்பது ஒரு மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக் கம்பனி ஆகும். இது நாட்டதாரர்களுக்காக தனது ESG (சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை) அறிக்கையைத் தயாரிக்கிறது. ESG தகவல்களின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்காக, **Greentech PLC** ஒரு சுயாதீன உத்தரவாத வழங்குநரை ஈடுபடுத்தத் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**Greentech PLC** இன் ESG அறிக்கை தொடர்பான ஓர் உத்தரவாத ஈடுபடுத்தலின் (assurance engagement) மூன்று (03) பிரதான கூறுகளை (key elements) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

***வினா 03***

**FreshCart (Pvt) Ltd.** என்பது ஒரு வளர்ந்துவரும் ஒன்லைன் மளிகைப் பொருள்கள் விநியோகக் கம்பனி ஆகும். வாடிக்கையாளர்கள் கையடக்கத் தொலைபேசிச் செயலி ஊடாக தமது ஓடர்களைச் செய்யும்போது, கம்பனி அதே நாளில் பொருள்களை விநியோகஞ் செய்ய உறுதியளிக்கிறது. எவ்வாறாயினும், அண்மைய மாதங்களில், விநியோகத்தில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் தவறான பொருள்கள் விநியோகம் செய்யப்படுவது குறித்தும் வாடிக்கையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பில் உள்ளக மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டபோது, ஓடர்களைக் கையாளுகையில் பல்வேறு வணிகச் செயற்பாடுகளுக்கிடையே நிலவும் சிக்கல்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம் எனத் தெரிய வந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கம்பனிச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய இரண்டு (02) பிரதான வணிகச் செயன்முறைகளை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) இந்த வணிகச் செயன்முறைகள் ஒன்றுடனொன்று இணைந்துள்ளன என்பதைப் புரிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## *வினா 04*

**Eco Build (Pvt) Ltd.** என்பது சூழலுக்கு உகந்த (eco-friendly) நிர்மாணப் பொருள்களை தயாரிக்கின்ற ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு உள்ளக மீளாய்வில் கொள்வனவுக் கட்டளைகள் உரிய அனுமதியின்றி செய்யப்பட்டுள்ளன என்பதும் பெறப்பட்ட பொருள்கள், செய்யப்பட்ட கட்டளைகளுடன் மீளவும் பொருத்திப் பார்க்கப்படவில்லை என்பதும் தெரிய வந்தது. இந்தப் பிரச்சினைகள், அதிக கொள்வனவுக் கட்டளைகள் மேற்கொள்ளப்படல், வழங்குநர் கொடுப்பனவுகளில் தாமதங்கள் மற்றும் விநியோகங்கள் பற்றிய பிணக்குகள் போன்றவற்றை உருவாக்கியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Eco Build (Pvt) Ltd.** இன் பெறுகைச் செயன்முறையில் உள்ள இரண்டு (02) பிரதான உப செயன்முறைகளை (sub processes) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **Eco Build (Pvt) Ltd.** தனது பெறுகைச் செயன்முறையை மேம்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்த வேண்டிய இரண்டு (02) உள்ளகக் கட்டுப்பாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## *பகுதி A முடிவு*

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் – 30 புள்ளிகள்)

**பகுதி B**

***வினா 05***

**Agro PLC** என்பது ஒரு முன்னணி விவசாய வணிக நிறுவனமாகும். தற்போது, மாதாந்த நிதிக் கூற்றுக்களை இறுதி செய்யும் செயன்முறையின் (closure process) போது, குறிப்பாக கணக்கு மீதிகளின் கணக்கிணக்கங்களில் கைமுறையான தலையீடுகள் தேவைப்படும்போது, பகுதியளவில் ஒருங்கணைக்கப்பட்ட IT முறைமை ஒன்றை இந்நிறுவனம் பயன்படுத்துகிறது.

அண்மையில், இடைக்கால நிதிசார் முடிவுகளை வெளியிடுவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. இது நிதிக் குழுவினுள் போதுமான வளங்கள் இல்லாமை குறித்த கவலையை ஏற்படுத்தியது.

மேலும், பல பிரதான நிதி அதிகாரிகள் நிறுவனத்தை விட்டு வெளியேறியமை ஆனது சவால்களை அதிகப்படுத்தியது. இந்தப் பிரச்சினைகள் நிதி அறிக்கையிடலின் துல்லியத்தன்மை மற்றும் காலக்கெடுவிலும் ஒட்டுமொத்த ஆளுகையிலும் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி கணக்காய்வுக் குழு தற்போது கவலை கொண்டுள்ளது.

இந்தக் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கு கம்பனி டிஜிடல் உருமாற்றத் தொழினுட்பங்களை ஆராய்ந்து வருகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Agro PLC** இன் நிதிக் கூற்றுக்களை இறுதி செய்யும் செயன்முறையில் சம்பந்தப்பட்டுள்ள இரண்டு (02) பிரதான செற்பாடுகளை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றை இறுதி செய்யும் செயன்முறையை மேற்பார்வை செய்வதில் கணக்காய்வுக் குழுவின் வகிபாகத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) தன்னியக்கம், செயற்கை நுண்ணறிவு போன்ற டிஜிடல் உருமாற்றத் தொழினுட்பங்கள் **Agro PLC** இன் நிதிக் கூற்றுக்களை இறுதி செய்யும் செயன்முறையை எவ்வாறு உகந்ததாக்கும் எனவும் எவ்வாறு ஆளுகையை வலுப்படுத்தும் எனவும் **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 06*

**Stretch Apparels (Pvt) Ltd.** என்பது ஏற்றுமதிச் சந்தைக்கு ஆடைகளைத் தயாரிக்கின்ற ஓர் இலங்கைக் கம்பனி ஆகும். இதன் அதிகளவான உற்பத்திப் பொருள்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இக்கம்பனி இலங்கையில் பல தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளதுடன் அவற்றில் 2,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணி புரிகின்றனர்.

அண்மையில், அமெரிக்க அரசாங்கம் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆடைகளுக்கு உயர்ந்த வரிகளை விதித்திருந்தது. தொடக்கத்தில் இலங்கை 44% வரிக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஆயினும் தற்போது அந்த வரி 90 நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் சகல நாடுகளும் 10% வரியை மாத்திரம் செலுத்தும். இது கம்பனி தன்னை சரிசெய்து கொள்ள சிறிது காலத்தை வழங்குகிறது.

உள்ளகக் கணக்காய்வானது கீழ்வருவன உள்ளிட்ட கம்பனியின் வணிகச் செயன்முறைகளில் காணப்படும் பல பிரச்சினைகளை வெளிப்படுத்தியது :

- வாடிக்கையாளரின் ஓடர்களைக் கண்காணிப்பதில் தவறுகள் காணப்படுதல்.
- உற்பத்தியின்போது துணிகள் வீண்விரயமாதல்.
- மூன்றாம் தரப்பு போக்குவரத்து சேவை வழங்குநர்களால் விநியோகத்தில் தாமதங்கள் ஏற்படல்.

AI அடிப்படையிலான எதிர்வுகூறல் மற்றும் முகில் அடிப்படையிலான ERP முறைமை போன்றவற்றின் நடைமுறைப்படுத்தலின் மூலம் கம்பனி அதன் செயற்பாடுகளை நவீனமாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. எவ்வாறாயினும், அண்மையில் ஊழியர் தரவுகள் மற்றும் கிரயத் தரவுகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட ஊடுருவல் தாக்குதலை (phishing attack) அது எதிர்கொண்டுள்ளது.

கம்பனி சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக மாற உறுதிபூண்டுள்ளது. அது நீர்ப் பயன்பாட்டை 30% இனால் குறைக்கவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சாயங்களைப் பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. ஆனால், புதிய இயந்திரங்கள் அதிக மின்சாரத்தை நுகர்வதால் அது, இந்த இலக்குகள் அடையப்படுவதை மிகவும் கடினமானதாக ஆக்கும். கம்பனியின் சுற்றுச்சூழல் முயற்சிகள் குறித்த சில அறிக்கைகள் முழுமை அடையாதவையாகவும் துல்லியமற்றவையாகவும் இருப்பதை கணக்காய்வு வெளிப்படுத்தியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

**(a)** கம்பனியை இடருக்கு ஆளாக்குகின்ற இரண்டு (02) வணிகச் செயன்முறைகளை விவரணத்திலிருந்து உதாரணங்களைப் பயன்படுத்தி **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

**(b)** டிஜிடல் உருமாற்றம் மற்றும் நிலைபேற்றுத்தன்மை முயற்சிகளின் விளைவாக கம்பனி எதிர்கொள்கின்ற இரண்டு (02) நவீன வணிக இடர்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

**(c)** மேலே (b) இல் அடையாளங் காணப்பட்ட ஒவ்வொரு இடருக்கும் எடுக்கப்படும் நடவடிக்கை பற்றி **ஆராய்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 07*

**T Zone (Pvt) Ltd.** ஆனது நாட்டிலுள்ள பிரதான நகரங்களில் பல்பொருள் அங்காடிச் சங்கிலியை இயக்குகிறது. ஒவ்வொரு கடையும் அதன் சொந்த விற்பனை, காசு சேகரிப்பு, இருப்பு முகாமைத்துவம் ஆகியவற்றைக் கையாளுகிறது. சமீபத்தில், தலைமை அலுவலகம் வழுக்களைக் குறைப்பதற்கும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கும் ஒரு புதிய உள்ளகக் கட்டுப்பாடுகளின் தொகுதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் பின்வருவன உள்ளடங்குகின்றன :

- சேகரிக்கப்படும் அனைத்து காசும் நாளின் முடிவில் இரண்டு பணியாளர்களால் எண்ணப்பட்டு கையொப்பமிடப்பட வேண்டும்.
- இருப்புக் கணக்கெடுப்பு வாரந்தோறும் செய்யப்பட வேண்டும் என்பதுடன் அதன் முடிவுகள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
- ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு தள்ளுபடியும் கடை முகாமையாளரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இந்தக் கட்டுப்பாடுகள் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளதா, அவை கடைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை மீளாய்வு செய்ய உள்ளகக் கணக்காய்வு அணியிடம் கேட்கப்பட்டுள்ளது. சிறந்த உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வழக்கமான கணக்காய்வுகள் என்பன வணிகத்திற்கு இழப்புகளைக் குறைக்கவும் அறிக்கையிடல் துல்லியத்தன்மையை மேம்படுத்தவும் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகையை வலுப்படுத்தவும் உதவும் என கம்பனியின் முகாமை நம்புகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **T Zone (Pvt) Ltd.** அதன் செயற்பாடுகளை பயனுறுதிமிக்க வகையில் முகாமை செய்வதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளும் உள்ளகக் கணக்காய்வுகளும் எவ்வாறு உதவுகின்றன என்பதை மூன்று (03) வழிகளில் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) தினசரி காசுக் கையாளல் கட்டுப்பாடானது பயனுறுதிமிக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதா என்பதைச் சோதிப்பதற்கு உள்ளகக் கணக்காய்வு அணி பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) நுட்பங்களை **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *பகுதி B முடிவு*

**இரண்டு (02) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் – 50 புள்ளிகள்)

**பகுதி C**

***வினா 08***

**Fresh Mart (Pvt) Ltd.** என்பது இலங்கை பூராகவும் 12 விற்பனை நிலையங்களை இயக்கும் புதிதாகத் தாபிக்கப்பட்ட ஒரு சிறப்பங்காடிச் சங்கிலி ஆகும். இக்கம்பனி மளிகைப் பொருள்கள், வீட்டு உபயோகப் பொருள்கள், புதிய விளைபொருள்கள் ஆகியவற்றை வழங்குவதுடன் நாளாந்த விற்பனையானது காசு மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டின் ஊடாகவும் செய்யப்படுகின்றன. அதன் விரிவுபடுத்தல் தந்திரோபாயங்களின் ஒரு பகுதியாக, ஐந்து புதிய கடைகளைத் திறக்கவும் அதன் ஏற்பாட்டியல் (logistics) உட்கட்டமைப்பை மேம்படுத்தவும் கம்பனி குறிப்பிடத்தக்க வங்கிக் கடனை எதிர்பார்க்கிறது. வங்கியானது 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளது.

இது கம்பனியின் முதலாவது சட்டநியதிக் கணக்காய்வாக இருக்கும் என்பதுடன் கணக்காய்வை நடாத்துவதற்காக **PQR & Co** என்ற பட்டயக் கணக்காளர் நிறுவனத்தை பணிப்பாளர்கள் நியமித்துள்ளனர்.

தொடக்க ஈடுபடுத்தல் கூட்டத்தில், கணக்காய்வுப் பங்காளர் கீழ்வருவனவற்றை அவதானித்துள்ளார் :

- நிதிப் பிரிவு சிறியதாக இருப்பதுடன் பிரதான கணக்கீட்டுக் கடமைகள் ஒரு சில ஊழியர்களிடையே பகிரப்பட்டுள்ளன. ஊழியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கணக்காய்வு அனுபவத்தைக் கொண்டுள்ளனர்.
- 2024 நவெம்பரில் ஒரு புதிய விற்பனை முனையமும் (POS) இருப்பு முகாமைத்துவ முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சில விற்பனை நிலையங்கள் முறைமையை முழுமையாக ஒருங்கிணைக்கச் சிரமப்பட்டுள்ளதுடன் பௌதிக ரீதியான இருப்பு பெரும்பாலும் முறைமையிலுள்ள பதிவுகளுடன் பொருந்தவில்லை.
- ஒவ்வொரு கடையும் நாளாந்தம் நூற்றுக்கணக்கான பரிவர்த்தனைகளைக் கையாள்வதுடன் அவை பெரும்பாலும் காசு, அட்டைகள், மொபைல் பணப்பைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு கடையிலும் கம்பனி சுயாதீன காசு இணக்கக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தவில்லை.
- முகாமையானது இருப்புச் சுருக்கம் மற்றும் குறைப்பு, காலாவதியான பொருள்களுக்கான ஏற்பாடுகள் மற்றும் சந்தேகத்திற்குரிய வியாபார வருமதிகள் ஆகியவற்றுக்கான மதிப்பீடுகளைச் செய்துள்ளது. இந்தப் புள்ளிவிபரங்கள் அறிக்கையிடப்பட்ட இலாபத்தைக் கணிசமானளவு பாதிக்கலாம்.
- இரண்டு விற்பனை நிலையங்களில் பதிவு செய்யப்படாத விற்பனைகள் மற்றும் இருப்புத் திருட்டு பற்றிய அறிக்கைகள் கிடைத்துள்ளன. முகாமையானது ஓர் உள்ளக மீளாய்வைத் தொடங்கிய போதிலும் அது இன்னும் முடிவுக்கு வரவில்லை அல்லது ஆவணப்படுத்தப்படவில்லை.
- வங்கிக் கடன் செயன்முறைப்படுத்தல் காலக்கெடுவைப் பூர்த்தி செய்வதற்கு கணக்காய்வானது ஆறு வார காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

கணக்காய்வு அணி தற்போது திட்டமிடல் கட்டத்திற்குத் தயாராகி வருகிறது. இதில் வணிகத்தைப் பற்றிய புரிதலைப் பெறல் மற்றும் இடர்களை மதிப்பீடு செய்தல் ஆகியவை உள்ளடங்குகின்றன. ஈடுபடுத்தல் பங்காளர் தொடர்புடைய இலங்கைக் கணக்காய்வு நியமங்கள் (SLAuSs) முழுவதையும் பின்பற்றுமாறு கணக்காய்வு அணியை அறிவுறுத்தியுள்ளார். மேலும் சரியான ஆவணப்படுத்தல் மற்றும் அறிக்கையிடலையும் உறுதிப்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் கணக்காய்வுக்காக **Fresh Mart** நிறுவனத்தின் சுயாதீனக் கணக்காய்வாளரின் மூன்று (03) பொறுப்புகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Fresh Mart** உடனான கணக்காய்வு ஈடுபடுத்தல் கடிதத்தில் இணங்கிக்கொள்ள வேண்டிய இரண்டு (02) அத்தியாவசியக் கூறுகளை (elements) **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(c) கணக்காய்வுத் திட்டமிடலின் ஒரு பகுதியாக **Fresh Mart** நிறுவனத்தின் கணக்காய்வாளர்கள் பின்பற்ற வேண்டிய மூன்று (03) பிரதான நடவடிகடகைகளை (key steps) **விபரிக்குக** (அ-து, ஒட்டுமொத்த தந்திரோபாயம் மற்றும் விபரமான கணக்காய்வுத் திட்டத்தை விருத்தி செய்கையில்). (05 புள்ளிகள்)

(d) **Fresh Mart (Pvt) Ltd.** இன் கணக்காய்வுக்காக பொருண்மையைத் தீர்மானிக்கும்போது கணக்காய்வு ஈடுபடுத்தல் அணி கவனம் செலுத்த வேண்டிய இரண்டு (02) காரணிகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(e) கணக்காய்வின்போது மோசடி இடரைக் கண்டுபிடித்து, பதிலிறுப்பதற்கான கணக்காய்வாளரின் பொறுப்பினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(f) **Fresh Mart** நிறுவனம் மற்றும் அதன் சுற்றுச்சூழலைப் புரிந்து கொள்வதற்கு கணக்காய்வு அணி பயன்படுத்த வேண்டிய இரண்டு (02) நடைமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## *வினா 09*

**Med Care (Pvt) Ltd.** *(கம்பனி)* இலங்கை முழுவதும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் விசேட மருத்துவ நிலையங்களின் சங்கிலியை இயக்குகிறது. இக்கம்பனி பொது மற்றும் அறுவைச் சிகிச்சைப் பராமரிப்பு, ஆய்வுகூடச் சோதனைகள், வெளிநோயாளர் சேவைகள் ஆகியவற்றை வழங்குகிறது. தனியார் சுகாதாரப் பராமரிப்புக்கான தேவை அதிகரித்து வருவதால், கம்பனி ஆறு மருத்துவமனைகளாக விரிவடைந்துள்ளதுடன் 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மேலும் இரண்டைத் திறக்கவும் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் புதிய தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் அறிமுகப்படுத்தலுடன், சமீபத்திய தொழில்துறை இடர்களைக் கருத்திற்கொண்டு, பணிப்பாளர் சபையானது ஒரு நிறுவன இடர் முகாமைத்துவ (ERM) வேலைச்சட்டகத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்ந்துள்ளது. தற்போது இடர் முகாமைத்துவமானது திணைக்கள மட்டத்தில் முறைசாரா முறையில் செய்யப்படுவதுடன் கம்பனியின் தந்திரோபாயத் திட்டமிடல் அல்லது ஆளுகைச் செயன்முறையினுள் அது ஒருங்கிணைக்கப்படவில்லை.

உள்ளகக் கணக்காய்வுச் (IA) செயற்பாட்டை நிறுவலாமா எனக் கணக்காய்வுக் குழு பரிசீலித்து வருகிறது. சில பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் குறிப்பாக, பிணியாய்வுச் செயற்பாடுகள் மற்றும் பெறுகைச் செயற்பாடுகளில் இது மேற்பார்வையை வலுப்படுத்துமென நம்புகின்றனர். எவ்வாறாயினும், திணைக்களப் பரிசோதனைகள் போதுமானவை எனவும் IA ஆனது தேவையற்ற செலவுகளை ஏற்படுத்தக்கூடும் எனவும் CEO நம்புகிறார்.

இதற்கிடையில், கம்பனி பட்டயக் கணக்காளர் நிறுவனமான **Asoka & Co.** இனை தனது வெளிவாரிக் கணக்காய்வாளராக மீளவும் நியமித்துள்ளது. திட்டமிடல் கட்டத்தில், கணக்காய்வுப் பங்காளர் கீழ்வரும் பிரச்சினைகளை இனங்கண்டுள்ளார் :

- கம்பனியின் ஈடுபடுத்தல் பங்காளர் தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் இந்தப் பொறுப்பை வகித்து வருவதுடன் **Asoka & Co.** இல் முன்பு பணியாற்றிய CFO உடன் நெருங்கிய உறவையும் வளர்த்துக் கொண்டுள்ளார்.
- கணக்காய்வுத் திட்டமிடல் கட்டத்தில் உதவியதற்காக ‘‘நன்றிக்கான சைகையாக’’ கம்பனியின் HR பிரிவிலிருந்து ஒரு கனிஷ்ட கணக்காய்வு அணி உறுப்பினர் ஒரு பரிசு வவுச்சரை ஏற்றுக்கொண்டார்.
- கணக்காய்வு நிறுவனம் அதிகளவு ஊழியர் வெளியேற்றத்தை (staff turnover) அனுபவிப்பதுடன் இது ஈடுபடுத்தல் தர மீளாய்வுகள் மற்றும் தொடர்ச்சித்தன்மையைப் பாதிக்கிறது.

பங்காளர், ஈடுபடுத்தல் முழுவதும் தொழில்முறைக் கணக்காளர்களின் நெறிமுறைக் கோவை மற்றும் தரக் கட்டுப்பாட்டு நியமங்களுடன் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்துமாறு கணக்காய்வு அணிக்கு நினைவூட்டியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Med Care (Pvt) Ltd.** இன் வணிகச் செயன்முறைகளில் நிறுவன இடர் முகாமைத்துவத்தை (ERM) ஒருங்கிணைப்பதன் மூலம் அதன் செயற்பாடுகளை மேம்படுத்தக்கூடிய மூன்று (03) வழிகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **Med Care (Pvt) Ltd.** இன் செயற்பாடுகள், தந்திரோபாயத் திட்டமிடல், அல்லது ஆளுகையில் ERM ஐ உட்பதிப்பதால் ஏற்படும் இரண்டு (02) நன்மைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) **Med Care (Pvt) Ltd.** ஓர் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டை அறிமுகப்படுத்தினால், அது பின்பற்றக்கூடிய உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(d) **Med Care (Pvt) Ltd.** ஏன் ஓர் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டை நிறுவ வேண்டும் என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) **Med Care (Pvt) Ltd.** இன் கணக்காய்வில் கண்டறியப்பட்ட இரண்டு (02) நெறிமுறை அச்சுறுத்தல்களை அது கணக்காய்வில் ஏற்படுத்தும் தாக்கங்களுடன் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(f) மேலே பகுதி (e) இல் இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு அல்லது நீக்குவதற்கு கணக்காய்வு நிறுவனம் நடைமுறைப்படுத்தக்கூடிய இரண்டு (02) பாதுகாப்புகளைப் **பரிந்துரைக்குக.**
(03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

***பகுதி C முடிவு***

## செயல் வினைச்சொல் சரிபார்ப்புப் பட்டியல்

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br><br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br><br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விபரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br><br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்குக (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்குக (Present) | தகவல்களை பயனுறுதி மிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு**<br><br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br><br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br><br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |

**இலங்கை**

**கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

பாடத்திட்டம் **2025**

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# மட்டம் 03

## 3803 - இடர், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (RCA)

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு**

**நான்கு (04) கட்டாய வினாக்கள்** | **பகுதி A**

(மொத்தம் – 20 புள்ளிகள்)

**வினா 01 இற்கான விடைகள்**

| | |
|---|---|
| **அலகு 1 – ஆளுகை வேலைச்சட்டகம்** | |
| கற்றற் பேறுகள் | - நிறுவன ஆளுகையின் பகுதிகளை குழுக்களுடன் விபரித்தல் |
| | - பயனுறுதிமிக்க இடர் முகாமைத்துவத்தை ஆதரிப்பதில் நிறுவன ஆளுகையின் வகிபாகத்தை விபரித்தல் |

**(a) நிறுவன ஆளுகையின் கூறுகள் :**

- பணிப்பாளர் சபை.
- நாட்டதாரர் ஈடுபாடு.
- வெளிப்படைத்தன்மையும் வெளிப்படுத்துகையும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள்.
- நெறிமுறைசார் நிறுவனக் கலாசாரம்.
- பொறுப்புக்கூறல். **(1 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(b) இடர் முகாமைத்துவக் குழு :**

இடர் முகாமைத்துவக் குழுவானது வணிகத்தை பாதிக்கக்கூடிய இடர்களை இனங்கண்டு, மதிப்பீடு செய்து கண்காணிப்புச் செய்கிறது. அத்துடன் இது இத்தகைய இடர்களைத் தணிப்பதற்காக தந்திரோபாயங்களை விருத்தி செய்வதுடன் இடர் மதிப்பீடுகளை மீளாய்வு செய்வதன் ஊடாக கம்பனி ஏற்றுக்கொள்ளத்தக்க இடர் மட்டங்களுள் இயங்குவதை உறுதி செய்கிறது. மேலும் இடர் முகாமைத்துவக் குழுவானது இடர் பசி மற்றும் ஆளுகைக் கட்டமைப்பு தொடர்பான அதன் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பணிப்பாளர் சபைக்கு உதவுகிறது. இது சொத்துக்களைப் பாதுகாக்கவும் செயற்பாட்டு நிலைத்தன்மையைப் பராமரிக்கவும், நீண்ட கால நிலைபேற்றுத்தன்மையை அதிகரிக்கவும் உதவுகிறது. **(03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

**வினா 02 இற்கான விடைகள்**

| |
|---|
| **அலகு 4 – உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களும் தொடர்புடைய சேவைகளும்**<br>கற்றற் பேறுகள் – உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் பிரதான கூறுகளை விபரிப்பதுடன் கூறுகளைத் தொடர்புபடுத்துதல் |

**Greentech PLC** இன் ESG அறிக்கைச் சூழமைவில் உள்ள உத்தரவாத ஈடுபடுத்தலின் பிரதான கூறுகள் கீழ்வருமாறு :

(1) **மூன்று – தரப்பு தொடர்புடைமை :** உத்தரவாதப் பயிற்சியாளர் (சுயாதீன கணக்காய்வாளர்), பொறுப்புடைய தரப்பினர் (**Greentech** இன் முகாமை ESG அறிக்கையைத் தயாரிக்கிறது), மற்றும் நோக்கம் கொண்ட பயனர்கள் (ESG தகவலை நம்பியிருக்கும் நாட்டதாரர்கள்).

(2) **விடயப் பொருள் :** அறிக்கையில் உள்ளடங்கியுள்ள வெளிப்படுத்துகைகளும் ESG தரவுகளும்.

(3) **பொருத்தமான தேர்வுநிபந்தனை:** GRI நியமங்கள் அல்லது SLFRS S 1 போன்ற ESG தரவுகள் மதிப்பிடப்படுகின்ற நியமங்கள் அல்லது வேலைச்சட்டகங்கள்.

(4) **சான்று:** சோதித்தல் மற்றும் மதிப்பிடுதல் மூலம் உத்தரவாத வழங்குநரால் சேகரிக்கப்பட்ட தகவல்கள், முடிவுகளை ஆதரிக்கின்றன.

(5) **உத்தரவாத அறிக்கை:** ESG அறிக்கையின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்தும் உத்தரவாதம் வழங்குநரால் வழங்கப்பட்ட முடிவு, நாட்டதாரர்களின் நம்பிக்கையை மேம்படுத்துகிறது.

**(02 புள்ளிகள் வீதம், 05 புள்ளிகள்)**

**வினா 03 இற்கான விடைகள்**

| |
|---|
| **அலகு 2 – வணிக நிறுவனங்களில் வணிகச் செயன்முறைகள்**<br>கற்றற் பேறுகள் – வணிகச் செயன்முறைகளை இனங்காண்பர், முக்கியத்துவத்தை விபரிப்பர்: ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட செயன்முறைகளின் ஒரு முறைமையாக நிறுவனத்தைப் புரிந்துகொள்வர. |

**(a) வணிகச் செயன்முறைகள் :**

- கட்டளை முகாமைத்துவம் – வாடிக்கையாளர் கட்டளைகளைப் பெறுதலும் செயன்முறைப்படுத்தலும்.
- இருப்பு முகாமைத்துவம் – இருக்கின்ற உருப்படிகளைச் சரிபார்த்தலும் அனுப்புவதற்கான உருப்படிகளைத் தயார் செய்தல்.
- விநியோகச் செயன்முறை.
- காசு முகாமைத்துவம்.
- பெறுகை முகாமைத்துவம்.

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(b) வணிகச் செயன்முறைகள் ஒன்றுடனொன்று இணைந்திருப்பதன் முக்கியத்துவம் :**

- இந்தச் செயன்முறைகள் நெருங்கிய தொடர்புடையவை. கட்டளை முகாமைத்துவம் தவறான அல்லது தாமதமான கட்டளை விபரங்களை அனுப்புமாயின், இருப்புகளைக் கையாளும் அணி தவறான உருப்படிகளைப் பொதி செய்யலாம் அல்லது இருப்புச் சிக்கலை எதிர்கொள்ளலாம்.
- இது பின்னர் **விநியோகச் செயன்முறையைப்** பாதிக்கிறது. தாமதங்கள் அல்லது தவறுகளை ஏற்படுத்துகிறது.
- இடைத்தொடர்புகளைப் புரிந்துகொள்வது பிரிவுகள் முழுவதும் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிப்படுத்த உதவுவதுடன் வழுக்களைக் குறைத்து, வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்துகிறது. **(01½ புள்ளிகள் வீதம், 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

**வினா 04 இற்கான விடைகள்**

| |
|---|
| **அலகு 2 – வணிக நிறுவனங்களில் வணிகச் செயன்முறைகள்** |
| கற்றற் பேறுகள் – வணிக நிறுவனங்களின் பிரதான வணிகச் செயன்முறைகளை (பெறுகைச் செயன்முறை, சம்பளப்பட்டியல் செயன்முறை, காசு முகாமைத்துவச் செயன்முறை, இருப்பு முகாமைத்துவச் செயன்முறை, அத்துடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணச் செயன்முறை) ஆராய்வர. |

**(a) பெறுகைச் செயன்முறையில் உள்ள பிரதான உப செயன்முறைகள் :**

- **கொள்வனவுக் கோரிக்கை** – சேவைகள் அல்லது பொருள்களை வாங்க ஒரு பிரிவினால் கோரிக்கை வைக்கப்படுகிறது.
- **கட்டளையிடல் செயன்முறை –** பெறுகை அணி ஒரு கொள்வனவுக் கட்டளையை உருவாக்குகிறது. இது வழங்குநர்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- **பொருள்களைப் பெறுதல்** – பொருள்கள் வந்ததும், அவற்றை இருப்புகளாக ஏற்றுக் கொள்வதற்கு முன் பெறப்பட்ட உருப்படிகள் சரியான உருப்படிகள் என்பதையும் அவை சரியான அளவுகளில் கிடைக்கப் பெற்றுள்ளன என்பதையும் உறுதிசெய்ய கொள்வனவுக் கட்டளை மற்றும் விநியோகக் குறிப்புடன் சரிபார்க்கப்படுகின்றன.

**(01½ புள்ளி வீதம், 03 புள்ளிகள்)**

**(b) கட்டுப்பாடுகள்:**

- கொள்வனவுக் கட்டளைகள் தொடர்பான அதிகாரமளித்தல் கட்டுப்பாடு.
- கொள்வனவுக் கோரிக்கையை அங்கீகரித்தல்.
- கொடுப்பனவைச் செய்வதற்கு முன் மூன்று – வழிப் பொருத்தப்பாடு (three-Way Matching).
- செய்யப்பட்ட கொள்வனவுக் கட்டளையின்படி, பொருள்கள் பெறப்படுவதை சரிபார்த்த பின்னர் நியமிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் GRN ஐ அங்கீகரித்தல்.

**(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

***பகுதி A முடிவு***

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 30 புள்ளிகள்)

**பகுதி B**

**வினா 05 இற்கான விடைகள்**

**அலகு 2 – வணிக நிறுவனங்களில் வணிகச் செயன்முறைகள்.**

கற்றற் பேறுகள்

- தொடர்புடைய தரப்பு பரிவர்த்தனைகள் மற்றும் நிதிக் கூற்று வெளிப்படுத்துகைச் செயன்முறை உட்பட முக்கிய ஆளுகைச் செயன்முறைகளை இனங்கண்டு, விளக்குவதுடன், நிறுவனத்தின் இணக்கம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வதில் அவற்றின் வகிபாகத்தை வலியுறுத்துவர்
- வணிகச் செயன்முறைகளை உகந்ததாக்குவதில் டிஜிடல் மாற்றத் தொழினுட்பங்களின் (தன்னியக்கம், செயற்கை நுண்ணறிவு, மற்றும் இயந்திரக் கற்றல் உட்பட) வகிபாகத்தை விபரிப்பர்

**(a) நிதிக் கூற்றுக்களை இறுதி செய்யும் செயன்முறையில் சம்பந்தப்பட்ட பிரதான நடவடிக்கைகள் :**

- கணக்கிணக்கச் செயன்முறை ஊடாக தரவின் துல்லியத்தன்மையையும் முழுமையையும் சரிபார்த்தல்.
- சீராக்கல் நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை அனுப்புதல் (இறுதிப் பதிவுகள்) – சீராக்கல் நாட்குறிப்பேட்டுப் பதிவுகள்.
- நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலும் மீளாய்வு செய்தலும்.

**(01½ புள்ளிகள் வீதம், 02 புள்ளிகள்)**

**(b) கணக்காய்வுக் குழுவின் வகிபாகம் :**

- நிதி அறிக்கையிடலின் சரியான நேரம் மற்றும் துல்லியத்தன்மையை உறுதி செய்வதற்கு நிதி அறிக்கையிடல் செயன்முறையைக் கண்காணித்தலும் அது பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை உறுதி செய்தலும்.
- நிதிக் குழுவினுள் வளங்கள் மற்றும் ஆற்றல்கள் போதுமான அளவு இருப்பதை மேற்பார்வை செய்து, ஏதாவது வெற்றிடம் இனங்காணப்பட்டால் முகாமை நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.
- உள்ளகக் கட்டுப்பாடுகள் பயனுள்ளதாக இருப்பதையும் ஊழியர் புரள்வு தொடர்பான இடர்கள் தணிக்கப்படுவதையும் உறுதி செய்தல். செயன்முறை தன்னியக்கப்படுத்தல் அல்லது பயிற்சியை ஆதரிப்பதன் மூலம் இது சாத்தியமாகும். அத்துடன் நிதி அறிக்கையிடல் மீது போதுமான உள்ளகக் கட்டுப்பாடு இருக்கிறதா என்பதையும் இது மதிப்பிடுகிறது.

**(01½ புள்ளிகள் வீதம், 03 புள்ளிகள்)**

**(c) டிஜிடல் நிலைமாற்றம் :**

- கணக்கிணக்கம் மற்றும் அறிக்கை உருவாக்கத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கைமுறைப் பணிச்சுமையைக் குறைப்பதும் பிரதான ஊழியர்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதும்.
- முரண்பாடுகளைக் கண்டறிந்து, தரவு ஒருமைப்பாட்டை உறுதி செய்தல், குறிப்பாக AI பயன்படுத்தப்படும்போது குறைக்கப்பட்ட மனித வலுவை ஈடுசெய்கின்ற எச்சரிக்கைகளை வழங்குதல்.
- தடைகளைக் கணிக்க வடிவ அமைப்புகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் செயன்முறை மேம்பாடுகளைப் பரிந்துரைத்தல், இறுதி செய்தலின் வேகம் மற்றும் துல்லியத்தை மேம்படுத்தல்.
- மேம்பட்ட ஒருங்கிணைப்புக் கருவிகள் அல்லது நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமைகளைப் பயன்படுத்துவது கைமுறைக் கணக்கிணக்கத் தேவைகளைக் குறைக்கலாம் மற்றும் தடையற்ற தரவுப் பாய்வை உறுதி செய்யலாம், வழுக்களைக் குறைக்கலாம் மற்றும் நிதி அறிக்கைகளின் காலவரிசையை மேம்படுத்தலாம்.
- தானியங்குச் செயன்முறை தன்னியக்கம் (RPA) போன்ற தொழினுட்பங்களைப் பயன்படுத்தினால் வழக்கமான பணிகளை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் கையாள முடியும். அத்துடன் இது வழக்கமான பணிகளுக்குத் தேவைப்படும் மனித மணித்தியாலங்களின் எண்ணிக்கையையும் குறைக்கும்.

**(02½ புள்ளிகள் வீதம், 05 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 06 இற்கான விடைகள்

**அலகு 2 – வணிக நிறுவனங்களில் வணிகச் செயன்முறைகள்**

**அலகு 3 – இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளும்**

கற்றற் பேறுகள் - வணிகச் செயன்முறைகளை இனங்காண்பர், முக்கியத்துவத்தை விபரித்தல், ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட செயன்முறைகளின் ஒரு முறைமையாக நிறுவனத்தைப் புரிந்துகொள்ளல்

- டிஜிடல் மாற்றம் மற்றும் நிலைத்தன்மை தொடர்பான நவீன வணிக இடரை விபரித்தல்

- வணிகச் செயன்முறைகளுக்கும் இடர் வெளிப்படுத்துகைகளுக்கும் இடையேயான தொடர்பை அடையாளங் காணுதல்

(a) **இடர்களுக்கு ஆளாகும் வணிகச் செயன்முறைகள் :**

- **கட்டளை கண்காணிப்புச் செயன்முறை :** வாடிக்கையாளர் கட்டளைகளைக் கண்காணிப்பதில் ஏற்படும் தவறுகள் தாமதங்களுக்கு அல்லது தவறான விநியோகத்திற்கு வழிவகுக்கலாம். இது வாடிக்கையாளர் திருப்தியைப் பாதிப்பதுடன் ஏற்றுமதிச் சந்தைகளில் வாங்குபவர்களை இழக்கும் இடரையும் எதிர்காலக் கட்டளைகளை இழக்கும் இடரையும் ஏற்படுத்துகிறது.

- **உற்பத்திச் செயன்முறை – துணிப் பயன்பாடு :** உற்பத்தியின்போது துணியை வீணாக்குவது பொருள் கிரயத்தை அதிகரிக்கும். இது குறிப்பாக, தற்போதைய கட்டண இடைநிறுத்தம் போன்ற நிசசயமற்ற விலை நிர்ணயத்தின்போது இலாபத்திற்கான இடரைக் குறிக்கிறது.

- **விநியோகம் மற்றும் ஏற்பாட்டியல் செயன்முறை :** மூன்றாந் தரப்பு பயண ஏற்பாட்டாளர்களால் ஏற்படும் தாமத விநியோகங்கள் காலக்கெடு தவறுவதற்கும் அபராதங்களுக்கும் வழிவகுக்கும். இது கம்பனியை நற்பெயர் மற்றும் ஒப்பந்த இடர்களுக்கு ஆளாக்குகிறது.

**(02 புள்ளிகள் வீதம், அதிகபட்சம் 04 புள்ளிகள்)**

**(b)** **நவீன இடர்கள் :**

- **டிஜிடல் இடர்** – இணையப் பாதுகாப்பை மீறுதல் : ஊடுருவல் தாக்குதல் ஊழியர் மற்றும் கிரயமிடல் தரவுகளைப் பாதிக்கிறது. இது இரகசிய தகவல்களை இடரில் ஆழ்த்துவதுடன் நிதி அல்லது சட்டப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தக்கூடும்.

- **நிலைபேற்றுத்தன்மை இடர்** – எரிசக்திப் பயன்பாடு எதிர் சுற்றுச்சூழல் இலக்குகள் : கம்பனி நீர்ப் பயன்பாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாக இருக்க விரும்புகிறது. ஆனால் புதிய இயந்திரங்கள் அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன. இது கம்பனி அதன் நிலைபேற்றுத்தன்மை இலக்குகளை அடைவதைத் தடுக்கலாம், வாங்குபவர்களை அதிருப்தி அடையச் செய்யலாம்.

**(01½ புள்ளிகள் வீதம், 03 புள்ளிகள்)**

**(c)** **நடவடிக்கைகள் – நவீன இடர்கள் :**

| இடர் | கட்டுப்பாடு |
|---|---|
| **டிஜிடல் இடர்** | • இரு – காரணி அங்கீகாரத்தை அறிமுகப்படுத்தி, ஊழியர்களுக்கு வழக்கமான இணையப் பாதுகாப்புப் பயிற்சியை நடத்துதல். தரவுகளைப் பெறும்போது ஊடுருவல் தாக்குதலைத் தடுக்கவும் பாதுகாக்கவும் வழக்கமான முறைமைக் கணக்காய்வுகளை நடைமுறைப்படுத்தல்.<br>கடவுச்சொல் ஒன்றை இடுவதைத் தாண்டி, பயனர் சான்றுகள் திருடப்பட்டாலும் அங்கீகரிக்கப்படாத அணுகலை மிகவும் கடினமாக்குவதற்கு இரு-காரணி அங்கீகாரம் ஒரு கூடுதல் பாதுகாப்பைச் சேர்க்கிறது. ஊழியர் பயிற்சியானது ஊடுருவல் தாக்குதல் போன்ற இணைய அச்சுறுத்தல்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதுடன் டிஜிடல் நடைமுறைகளையும் ஊக்குவிக்கிறது. இதன் மூலம் வெற்றிகரமான இணையத் தாக்குதல்களின் வாய்ப்பினைக் குறைக்கிறது.<br>• ஊழியர்கள் எடுக்க வேண்டிய இடர்கள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய அதிக விழிப்புணர்வு. |

| | |
|---|---|
| **நிலைபேற்றுத்தன்மை இடர்** | • சக்திக் கண்காணிப்பு முறைமைகளை நிறுவி, துல்லியமான மற்றும் உரிய நேரத் தரவுகளை வழங்குவதற்கு நிலைபேற்றுத்தன்மை அறிக்கையிடல் செயன்முறைகளைப் புதுப்பித்தல்.<br><br>சக்திக் கணக்காணிப்பு முறைமைகள் உண்மையான மின்சார நுகர்வைக் கண்காணிக்க உதவுகின்றன. இதனால் வினைத்திறனின்மை இனங்காணப் பட்டு, திருத்த நடவடிக்கைகள் எடுப்பது எளிதாகிறது. துல்லியமான தரவும் நிலைபேற்றுத்தன்மை அறிக்கைகள் உண்மையான செயலாற்றுகையைப் பிரதிபலிப்பதை உறுதி செய்கின்றது. இது நாட்டதாரர்களின் நம்பகத் தன்மையைப் பேணுவதில் தவறான உரிமைகோரல் மற்றும் உதவி நிறுவனங்களின் இடரைக் குறைக்கிறது.<br><br>• பசுமை சக்தி போன்ற மாற்று சக்திகளைப் பயன்படுத்துவதைக் கவனத்திற் கொள்ளல். இது சுற்றுச்சூழலுக்கு குறைவான சேதத்தை ஏற்படுத்தும். |

**(ஒவ்வொரு இடருக்குமான ஒரு நடவடிக்கைக்கு, 1.5 புள்ளிகள், மொத்தம் 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**வினா 07 இற்கான விடைகள்**

| | | |
|---|---|---|
| **அலகு 3 – இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளும்.** | | |
| கற்றற் பேறுகள் | - | இடர்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வுகளுக்கு இடையிலான தொடர்பை விபரித்தல் |
| | - | கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு பயனுறுதித்தன்மையை சோதிப்பதற்குப் பயன்படுத்தப்படும் நுட்பங்களை ஆராய்தல் |

**(a)**

- உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பது ஒரு கம்பனி அதன் செயற்பாடுகளை முறையாக நடத்த உதவும் நடைமுறைகள் ஆகும். இதன் மூலம் இடர்கள் மற்றும் வழுக்கள் குறைக்கப்படுவதுடன் மோசடிகள் தடுக்கப்படுகின்றன. இந்தக் கம்பனியைப் பொறுத்தவரை, இரண்டு ஊழியர்கள் நாள் முடிவில் பணத்தை எண்ணி, கையொப்பம் இடுவது போன்ற கட்டுப்பாடுகள் பணத்தைக் கையாள்வதில் துல்லியத்தை உறுதி செய்யவும் திருட்டு அல்லது முறைகேடு இடரைக் குறைக்கவும் உதவுகின்றன.

- வாராந்த இருப்பு எண்ணிக்கைகள் ஏதாவது வேறுபாடுகள் அல்லது காணாமற்போன இருப்புகளை கண்டறிவதற்கு உதவுகிறது. இது இருப்புத் துல்லியத்தை அதிகரிப்பதுடன் திருட்டு அல்லது மோசமான கையாளுதல் காரணமாக ஏற்படும் இழப்புகளைத் தடுக்கவும் உதவுகிறது.

- இந்தக் கட்டுப்பாடுகள் நோக்கம் கொண்டபடி நடைமுறைப்படுத்தப்படுவதை சரிபார்ப்பதன் மூலம் உள்ளகக் கணக்காய்வுகள் கம்பனிக்கு உதவுகின்றன. கடைகள் புதிய நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனவா என்பதைக் கணக்காய்வு அணி மீளாய்வு செய்யலாம் என்பதுடன் மேலதிக மேம்பாடுகளையும் பரிந்துரைக்கலாம்.

- ஒன்றாக, உள்ளகக் கட்டுப்பாடுகளும் உள்ளகக் கணக்காய்வுகளும் துல்லியத்தன்மையை மேம்படுத்துவதன் மூலமும் தவறுகள் / வழுக்களைக் குறைப்பதன் மூலமும் அனைத்துக் கடைகளிலும் கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதன் மூலமும் கம்பனி அதன் செயற்பாடுகளை பயனுறுதிமிக்க வகையில் முகாமை செய்ய உதவுகிறது. அத்துடன் முகாமையானது தகவலறிந்த வணிக முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது. வழிப்படுத்தல் கணக்காய்வுகள் பொறுப்புக்கூறல் கலாசாரம் மற்றும் ஊழியர்களிடையேயான பொறுப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதுடன் செயற்பாடுகள் கொள்கைகளுடன் ஒத்துப்போவதற்கும் உதவுகின்றன.

**(03 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(b) செயற்பாட்டு பயனுறுதித்தன்மையப் பரிசோதிக்கும் நுட்பங்கள்**

**(i)** **விசாரணை :** செயன்முறை புரிந்து கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கு ஊழியர்களிடம் அவர்கள் பணத்தை எவ்வாறு எண்ணுகிறார்கள் என்பது குறித்து விசாரணைகள் செய்யப்படுகின்றன. மேலும் ஊழியர்கள் கட்டுப்பாட்டு நடைமுறைகள் பற்றி அறிந்துள்ளார்களா, அவற்றைப் பிரயோகிக்கின்றார்களா என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளலாம்.

**(ii)** **ஆய்வு :** இரண்டு ஊழியர்கள் தினமும் கையொப்பமிடுவதைச் சரிபார்க்க, காசு எண்ணிக்கைத் தாள்களைச் சரிபார்த்தல். மேலும் கணக்காய்வு அணி கணக்கிணக்கப் பதிவுகள் மற்றும் வங்கி வைப்புச் சீட்டுக்கள் போன்ற ஆவணங்களை ஆய்வு செய்யலாம். இரட்டைக் கட்டுப்பாடுகள் உள்ளதா என்பதை அவர்கள் சரிபார்க்கலாம், கணிப்பீடுகளின் துல்லியத்தை சரிபார்க்கலாம். அத்துடன் பதிவு செய்யப்பட்ட காசு வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசுடன் பொருந்துகிறதா என்பதையும் சரிபார்க்கலாம்.

**(iii)** **ஒத்திகை :** கட்டுப்பாடு உண்மையில் பின்பற்றப்படுகிறதா என்பதைப் பார்க்க நாளின் முடிவில் காசு எண்ணல் செயன்முறையை பௌதிக ரீதியாக அவதானிக்கலாம். இரண்டு ஊழியர்கள் தேவைக்கேற்ப காசை எண்ணிக் கையொப்பமிடுகிறார்களா என்பதை கணக்காய்வாளர் கண்காணிக்கலாம்.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

***பகுதி B முடிவு***

**இரண்டு (02) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் - 50 புள்ளிகள்)

**பகுதி C**

**வினா 08 இற்கான விடைகள்**

**அலகு 5 – இடர் மதிப்பீடு, கணக்காய்வுச் செயன்முறை மற்றும் கணக்காய்வு அறிக்கையிடல்.**

கற்றற் பேறுகள்
- சுயாதீன கணக்காய்வாளரின் ஒட்டுமொத்த நோக்கங்களையும் விபரித்து, SLAuSs இன் மூலம் கணக்காய்வை நடத்தி, கணக்காய்வு ஈடுபடுத்தலின் விதிமுறைகளுடன் இணங்குதல் (SLAUS 200 மற்றும் SLAUS 210).
- நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வைத் திட்டமிடுவதை விபரித்தல் (SLAUS 300).
- உறுதிப்படுத்தல்களை நிறுவுவதற்கு, கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதில் பயன்படுத்தப்படும் நடைமுறைகளை ஆராய்தல் (SLAUS 500).
- கணக்காய்வுப் பொருண்மை மற்றும் கணக்காய்வு ஆவணப்படுத்தலை விபரித்தல் (SLAUS 320 மற்றும் SLAUS 230).
- மோசடி இடரை வரையறுத்து, நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வில் மோசடியைத் தடுப்பதற்கும் கண்டறிவதற்குமான கணக்காய்வாளரின் பொறுப்பை விபரித்தல் (SLAUS 240)

**(a) கணக்காய்வாளரின் பொறுப்புகள் :**

- **நியாயமான உத்தரவாதத்தைப் பெறுதல் -** 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Fresh Mart** இன் நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது வழுக்களால் ஏற்பட்டதாக இருந்தாலும் அவை முற்றிலும் பொருண்மை பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளன என்று கணக்காய்வாளர் நியாயமான உத்தரவாதத்தைப் பெற வேண்டும். விசேடமாக, **Fresh Mart** இல் சேகரிக்கப்பட்ட ஆரம்பத் தகவல்களின்படி, மோசடி இடர்கள் மற்றும் சாத்தியமான கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் / கட்டுப்பாடுகள் இன்மையால் எழும் சாத்தியமான பிறழ்கூற்றுக்களை நிவர்த்தி செய்வதற்கு கணக்காய்வானது நன்கு திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

- **அபிப்பிராயம் ஒன்றை வெளிப்படுத்தல் -** போதுமானதும் பொருத்தமானதுமாக இருக்க வேண்டிய கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான நிதி அறிக்கையிடல் வேலைச்சட்டகத்திற்கு (SME களுக்கான SLFRS அல்லது பொருந்தக்கூடிய முழுமையான SLFRS) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து கணக்காய்வாளர் ஓர் அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

- **SLAuSs உடன் இணங்குதல் -** கணக்காய்வாளர் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) இணங்க, சுயாதீனம் மற்றும் தொழில்சார் சந்தேகம் போன்ற நெறிமுறைத் தேவைகளை உள்ளடக்கிய கணக்காய்வை நடத்துதல் வேண்டும்.

- **இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் -** கணக்காய்வாளர் பொருண்மை பிறழ்கூற்று இடர்களை மதிப்பிடுதல் வேண்டும். **Fresh Mart** இல், இடர்களில் துல்லியமற்ற இருப்பு, பதிவு செய்யப்படாத விற்பனைகள் மற்றும் முகாமைத்துவ மதிப்பீடுகள் ஆகியவை அடங்குகின்றன.
- **தகுந்த முறையிலான அறிக்கை –** கணக்காய்வாளர் தனது அபிப்பிராயத்தையும் கணக்காய்வுச் செயன்முறையின்போது கண்டறியப்பட்ட ஏதாவது சிக்கல்களையும் தெரிவிக்கும் எழுத்துபூர்வ கணக்காய்வு அறிக்கையை வழங்குதல் வேண்டும்.

**(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(b) ஈடுபடுத்தல் கடிதம் :**

- கணக்காய்வின் நோக்கமும் நோக்கெல்லையும் – நிதிக் கூற்றுக்கள் குறித்த சுயாதீன கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதே இதன் நோக்கம் என்பதை கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- கணக்காய்வாளரின் பொறுப்புகள்- இது நிதிக் கூற்றுக்கள் குறித்த கணக்காய்வுச் சான்றுகளைத் திரட்டிய பின்னர் ஒரு அபிப்பிராயத்தை உருவாக்குவது பற்றியதாகும். SLAuS இற்கிணங்க, கணக்காய்வை மேற்கொள்வதற்கும் நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதற்கும் கணக்காய்வாளர் பொறுப்புடையவர் என்பதை இது முன்னிலைப்படுத்த வேண்டும்.
- முகாமையின் பொறுப்புகளில் பதிவுகளுக்கான அணுகலை வழங்குதல் மற்றும் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடியைத் தடுத்தலும் கண்டறிதலும் குறித்த பொறுப்பு மற்றும் நிதி அறிக்கையிடல் மீதான தொடர்புடைய கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் ஆகியன உள்ளடங்கும்.
- பொருத்தமான நிதி அறிக்கையிடல் வேலைச் சட்டகம் – பொருத்தமான நிதி அறிக்கையிடல் வேலைச் சட்டகத்தின்படி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும் அத்துடன் பொருத்தமான நிதி அறிக்கையிடல் வேலைச்சட்டகத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து கணக்காய்வாளரின் ஓர் அபிப்பிராயத்தை உருவாக்குவதும் முகாமையின் பொறுப்பாகும்.
- கணக்காய்வாளரால் வெளியிடப்பட வேண்டிய எந்தவொரு அறிக்கையிலும் எதிர்பார்க்கப்படும் வடிவம் மற்றும் உள்ளடக்கத்திற்கான குறிப்புகள் - நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் என்பதற்கான குறிப்புகளை வழங்குதல்.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(c)**

- சேவைநாடுநரின் வணிகம் மற்றும் சுற்றுச்சூழல், தொழில்துறை, குறிப்பாக இது புதிதாகத் தாபிக்கப்பட்ட போட்டி என்பதால், நடைமுறையிலுள்ள தந்திரோபாயங்கள் போன்றவற்றைப் புரிந்து கொள்ளுதல்.

- புரிதலின் அடிப்படையில் எழுகின்ற இடர்களை அடையாளங் காணுதல், குறிப்பாக நிதிக் கூற்றுக்களில் உள்ள பொருண்மை பிறழ்கூற்றுக்களுக்கு வழிவகுக்கும் குறிப்பிடத்தக்க இடர்கள். உதாரணம்: இந்த விஷயத்தில் பொருத்தமான கட்டுப்பாடுகள் இல்லாததால் அதிகரித்த மோசடி இடரின் சில குறிகாட்டிகள் உள்ளன.

- வணிகம் பற்றிய புரிதல் மற்றும் நிதிசார் செயலாற்றுகை (கணியம்சார் மற்றும் தரம்சார் காரணிகள்) அடிப்படையில் நோக்கெல்லையைத் தீர்மானிக்க பொருண்மை மட்டங்களைத் தீர்மானித்தல்.

- பொருத்தமான பணியாளர்களை நியமித்தல். ஒரு புதிய முறைமை நடைமுறைப்படுத்தப் படுவதால் IT நிபுணர் தேவையா அல்லது வேறு ஏதாவது நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டுமா.

- கணக்காய்வு நடைமுறைகளின் தன்மை, நேரகாலம் மற்றும் நீடிப்பு உள்ளிட்ட கணக்காய்வுத் திட்டத்தை விருத்தி செய்தல்.

**(02 புள்ளிகள் வீதம், 05 புள்ளிகள்)**

**(d) பொருண்மையைத் தீர்மானித்தல் :**

- **வணிகத்தின் அளவும் தன்மையும் : Fresh Mart** என்பது அதிக பரிவர்த்தனை அளவையும் ஒப்பீட்டளவில் குறைந்தளவு இலாபத்தையும் கொண்ட ஒரு சில்லறை வணிகக் கம்பனி ஆகும். நிதிக் கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு எந்த மட்டத்தில் பிறழ்கூற்று பொருண்மையானதாக இருக்கும் என்பதைத் தீர்மானிப்பதற்கு மொத்த வருவாய், மொத்த இலாபம் அல்லது நிகர இலாபம் போன்ற பொதுவான மட்டக்குறிகளை மதிப்பீடு செய்ய வேண்டும்.

- **குறிப்பிட்ட பகுதிகளில் பிறழ்கூற்று இடர் (தரம்சார் காரணிகள்):** இருப்புச் சுருக்கம் மற்றும் முகாமைத்துவ மதிப்பீடுகள் போன்ற அதிக உள்ளார்ந்த இடர் கொண்ட பகுதிகளை அணியானது கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். அதிக இடர் உள்ள பகுதிகளில் சிறிய பிறழ்கூற்றுக்கள் காணப்படினும்கூட (உ-ம்: மோசடிக்கு ஆளாகும் காசு விற்பனைகள் அல்லது பதிவு செய்யப்படாத விற்பனைகள்) தீர்மானமெடுத்தலில் அவற்றின் தாக்கத்தின் காரணமாக பொருண்மையானதாக இருக்கலாம்.

- **Fresh Mart** ஆனது இன்னும் செயற்பாட்டின் முதலாவது ஆண்டில் இருப்பதாகத் தரப்பட்டுள்ளதால், மதிப்பிடப்பட வேண்டிய மட்டக்குறியின் பொருத்தப்பாட்டுத்தன்மை. உ - ம்: கம்பனி அதன் முதல் ஆண்டில் காட்டிய செயலாற்றுகையின் அடிப்படையில் பொருத்தமான மட்டக்குறியின் இலாபத்தைப் பிரதிபலிக்கிறதா.

**(1½ புள்ளிகள் வீதம், 03 புள்ளிகள்)**

**(e)**

- மொத்தமாக எடுக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது வழுக்களால் ஏற்பட்ட பொருண்மை பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளன என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தைப் பெற்றுக்கொள்ளல். விசேடமாக, திருட்டு மற்றும் பதிவு செய்யப்படாத விற்பனைகள் பற்றிய அறிக்கைகளைக் கருதும்போது, மோசடி இடரை நிவர்த்தி செய்வதற்கு கணக்காய்வாளர் குறிப்பிட்ட நடைமுறைகளை (உ—ம் : மிகையான காசு எண்ணிக்கை, கணக்கிணக்கங்கள்) ஆற்றுதல் வேண்டும்.

- தொழில்சார் சந்தேகத்தைப் பராமரித்தல், இடர் மதிப்பீட்டை மேற்கொள்ளுதல், மற்றும் அடையாளங் காணப்பட்ட மோசடி இடர்களுக்கு பதிலளிக்க கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்தல் மற்றும் கணக்காய்வு ஈடுபடுத்தல் நெடுகிலும் மோசடி இடரின் குறிகாட்டிகள் குறித்து எச்சரிக்கை செய்தல்.

**(03 புள்ளிகள்)**

**(f)** **நடைமுறைகள் :**

- **உள்ளக ஆவணங்களை மீளாய்வு செய்தல்** – நிதிக் கூற்றுக்கள், கொள்கைகள், நிறுவனக் கட்டமைப்பு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு ஆவணங்களைப் பகுப்பாய்வு செய்தல்.

- **அவதானிக்கப்பட்ட செயற்பாடுகள்** – சில விற்பனை நிலையங்களுக்குச் சென்று காசு சேகரிப்பு, இருப்பு கையாளுதல், அவர்கள் புதிய POS முறைமையை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை அவதானித்தல்.

- **முகாமையிடமும் பணியாளர்களிடமும் விசாரித்தல் -** POS முறைமையின் நடைமுறைப்படுத்தல், திருட்டு தொடர்பான உள்ளக மீளாய்வுகள், மதிப்பீடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பது பற்றி விசாரித்தல்.

- **பகுப்பாய்வு நடைமுறைகள் -** விற்பனை நிலையங்கள் முழுவதும் விற்பனைகள் அல்லது மொத்த இலாப எல்லைப் போக்குகளை ஒப்பிடுதல். விசேடமாக, பதிவு செய்யப்படாத விற்பனைகள் அல்லது இருப்புச் சுருக்கம் சந்தேகிக்கப்படும் இடங்களில்.

- சந்தை நிலைமை, ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள், தொழில்துறையைப் பாதிக்கும் பொருளாதாரக் காரணிகள் பற்றிப் புரிந்து கொள்வதற்கு தொழில்துறைப் பகுப்பாய்வை மேற்கொள்ளுதல்.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா 09 இற்கான விடைகள்**

**அலகு 6 – நிறுவன இடர் முகாமைத்துவத்தின் (ERM) அடிப்படைகள்**

**அலகு 7 – உள்ளகக் கணக்காய்வின் அடிப்படைகள்**

**அலகு 8 – நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான நெறிமுறைத் தேவைகளும் தரம்சார் தேவைகளும்**

கற்றற் பேறுகள்
- பிரதான வணிகச் செயன்முறைகளில் ERM இன் ஒருங்கிணைப்பை விபரித்தல்
- செயற்பாட்டு, உபாய, மற்றும் ஆளுகை வேலைச்சட்டங்களில் ERM ஐ உட்பதிப்பதால் ஏற்படும் நன்மைகளை அடையாளங் காணுதல்
- வேலைச்சட்டகங்கள் மற்றும் நுட்பங்கள் உட்பட உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறையை விபரித்தல்
- உள்ளகக் கணக்காய்வுக்கான தேவையை மதிப்பிடுவதில் கவனம் செலுத்த வேண்டிய காரணிகளை விபரித்தல்
- அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்குவதில் உள்ள அச்சுறுத்தல்களை இனங் காண்பதுடன், இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களின் விளைவுகளை மதிப்பிடுதல்
- ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்திற்கு அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கான/ நீக்குவதற்கான பாதுகாப்புகளைப் பிரயோகித்தல்

**(a) ERM ஒருங்கிணைப்பு :**

நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் தீர்மானமெடுத்தலில் இடர் முகாமைத்துவத்தை உட்படுத்துவதன் மூலம் **Med Care** இன் வணிகத்தில் ERM ஐ ஒருங்கிணைக்கலாம்.

- **வினைத்திறன் மற்றும் இடர் உணர்வுள்ள கலாசாரத்தை அதிகரித்தல் :** நோயாளி பராமரிப்பு, உபகரணங்களின் பழுதுகள், அல்லது சேவைத் தாமதங்கள் தொடர்பான இடர்களை அடையாளங் காணுதல். மீண்டும் மீண்டும் வருகின்ற அல்லது சீரற்ற இடர் முகாமைத்துவ நடைமுறைகளை அகற்றுவதற்கு உதவுவதால் ERM ஐப் பிரிவுகள் முழுவதும் பிரயோகித்தல். இது கம்பனி அளவிலான இடர் விழிப்புணர்வு கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதுடன் செயற்பாடுகளில் ஏற்படும் தடங்கல்களையும் தடுக்க உதவுகிறது.
- **வலுவான ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் பாதுகாப்பு :** சுகாதார விதிமுறைகள் மற்றும் உரிமத் தேவைகளைப் பின்பற்றுவதைக் கண்காணித்தல். தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் தற்போது நடைமுறையில் இருப்பதால் **Med Care** இணக்கத் தேவையில் முன்னோக்கி இருப்பதற்கு ERM உதவுகிறது. நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட ERM முறைமையானது தனியுரிமையை உறுதி செய்வதுடன் பிரிவு முழுவதும் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டு முகாமை செய்யப்படுகிறது. இது சட்ட மீறல்களுக்கான வாய்ப்பைக் குறைக்கிறது.
- **சிறந்த தீர்மானமெடுத்தலில் உதவுதல் :** புதிய வைத்தியசாலைகளைத் திறக்கும்போது அல்லது புதிய முறைமைகளில் முதலீடு செய்யும்போது இடர்களைக் கவனத்திற் கொள்ளுதல். கட்டமைக்கப்பட்ட ERM அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனம் பூராகவும் இடர்களை அதிக பயனுறுதித்தன்மையுடன் ஏற்பிசைவு செய்து மதிப்பிட முடியும். இது சவால்கள் மற்றும் வாய்ப்புகளைத் தெளிவாகப் புரிந்து கொள்வதன் மூலம் சிறந்த தெரிவுகளை மேற்கொள்ள தலைமைத்துவத்திற்கு உதவுகிறது. **(02 புள்ளிகள் வீதம், 06 புள்ளிகள்)**

**(b) ERM ஐ உட்பதிப்பதன் நன்மைகள் :**

**செயற்பாடுசார்ந்த நன்மை** : சேவைத் தடங்கல்களைக் குறைப்பதற்கும், நோயாளி பாதுகாப்பை மேம்படுத்தவும் பணியாளர் பற்றாக்குறை அல்லது வழங்கல் சங்கிலிப் பிரச்சினைகள் போன்ற இடர்களை அடையாளங் காணவும் உதவுகிறது.

**ஆளுகை நன்மை** : சபை மற்றும் கணக்காய்வுக் குழுவுக்கு இடர்கள் பற்றிய சிறந்த பார்வையை அளிக்கிறது. இது அதிக தகவலறிந்த தீர்மானமெடுத்தலையும் மேற்பார்வையையும் எளிதாக்குகிறது.

**தந்திரோபாய இலக்குகளுடன் இடரைச் சீரமைத்தல்** : வைத்தியசாலை விரிவாக்கம் அல்லது புதிய தொழினுட்பங்களை ஏற்றுக்கொள்வது போன்ற பிரதான தந்திரோபாய முயற்சிகள் இடர் தாக்கம் குறித்து மதிப்பிடப்படுவதை உறுதி செய்வதற்கு ERM உதவுகிறது. இது யதார்த்தமான மற்றும் நிலைபேறான திட்டங்களை உருவாக்க பணிப்பாளர் சபையை அனுமதிக்கிறது.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(c) உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறை :**

உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறை கீழ்வருவனவற்றை உள்ளடக்குகிறது :

- **திட்டமிடல்** – கணக்காய்வு நோக்கெல்லை மற்றும் நோக்கங்களை வரையறுத்தல், இடர் ஏற்படக்கூடிய பகுதிகளை அடையாளங் காணுதல். உ–ம்: பிணியாய்வு கட்டணப் பட்டியலிடல் அல்லது பெறுகை, தரவுப் பாதுகாப்பு.
- **களப்பணி** – உள்ளகக் கட்டுப்பாடுகள் பயனுறுதிமிக்க வகையில் செயற்படுகின்றனவா என்பதை மதிப்பிடுவதற்காக நேர்காணல்கள், முறைமை ஒத்திகைகள் மற்றும் ஆவண மீளாய்வுகள் ஊடாக சான்றுகளைச் சேகரித்தல்.
- **அறிக்கையிடல்** – கண்டறிதல்களைப் பொழிப்பாக்கி, மேம்படுத்தல்களைப் பரிந்துரைத்தல். பலவீனங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சரிசெய் நடவடிக்கைகள் உள்ளடங்கிய அறிக்கைகள் ஊடாகக் கண்டறிதல்களை முகாமைக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் தெரிவித்தல்.
- **பின்தொடர்தல்** – தொடர்ச்சியான மேம்பாடுகளை உறுதி செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவினுள் சிக்கல்களைச் சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதை மீளாய்வு செய்தல். **(01 புள்ளி வீதம், 04 புள்ளிகள்)**

**(d) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டை நிறுவுதல் :**

- **சுகாதாரப் பராமரிப்புத் தொழிற்றுறையின் சிக்கல்தன்மை : Med Care** விரிவடைவதால், அதன் செயற்பாடுகள் அதிக சிக்கல்தன்மை வாய்ந்ததாக மாறுகின்றன. விசேடமாக பெறுகை மருத்துவ சேவைகள் போன்ற பகுதிகளில். வைத்தியசாலைகள் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் வழுக்கள் (உ-ம்: சிகிச்சையளிப்பில் அல்லது கட்டணப் பட்டியலிடலில்) கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தலாம். உள்ளகக் கணக்காய்வுகள் தற்போதுள்ள கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளதை உறுதி செய்து, இந்த முக்கியமான பகுதிகளில் சாத்தியமான இடர்கள் அடையாளங் காணப்பட்டு, தீர்க்கப்படுவதை உறுதி செய்கின்றன.

- **விரிவாக்கமும் பரவலாக்கமும் :** அதிக வைத்தியசாலைகள் திட்டமிடப்பட்டிருப்பதால் செயற்பாடுகளை மையமாகக் கண்காணிப்பது கடினமாகிறது. உள்ளகக் கணக்காய்வு வெவ்வேறு இடங்களில் சுயாதீனமான உறுதிப்பாட்டை வழங்குகிறது.

- **சட்ட மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்தல் :** கம்பனி நோயாளிகளின் தகவல்களை இரகசியமாகக் கையாள்வதால் உள்ளகக் கணக்காய்வு அணி **Med Care** புதிய தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் தொழில்துறை விதிமுறைகளின் தேவைகளை பூர்த்தி செய்கிறது என்பதை உறுதி செய்ய உதவும். இது அபராதங்கள், சட்டச் சிக்கல்கள் அல்லது நற்பெயருக்குச் சேதம் விளைவிக்கும் வாய்ப்பைக் குறைக்கும்.

**(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(e) நெறிமுறை அச்சுறுத்தல்கள் :**

- **பரிச்சய அச்சுறுத்தல்** : கணக்காய்வுப் பங்காளர் **Med Care** கணக்காய்வில் தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் பணியாற்றி வருகிறார். மேலும் CFO இற்கு நெருக்கமாகவும் இருக்கிறார். இது புறநிலை மற்றும் தொழில்சார் சந்தேகத்தைப் பாதிக்கலாம்.

- **சுய நாட்ட அச்சுறுத்தல்** : சேவைநாடுநரின் HR பிரிவிலிருந்து பரிசு வவுச்சர் ஒன்றை ஏற்றுக் கொள்ளும் அணி அங்கத்தவர் சார்பு அல்லது சார்புத் தோற்றத்தை உருவாக்கலாம். குறிப்பாக, சைகை அவர்களது வேலையைப் பாதிக்குமாயின். இது சுய நாட்ட அச்சுறுத்தலை உருவாக்கும். ஏனெனில் தனிப்பட்ட நன்மை கணக்காய்வாளரின் புறநிலையில் செல்வாக்குச் செலுத்தலாம் என்பதுடன் பாரபட்சமற்றதாக இருக்கும் அல்லது சேவைநாடுநரின் செயல்களை பயனுறுதிமிக்க வகையில் கேள்விக்குட்படுத்தும் திறனைக் குறைக்கும். **(02 புள்ளிகள் வீதம், 04 புள்ளிகள்)**

**(f) பாதுகாப்புகள் :**

(1) **ஈடுபடுத்தல் பங்காளரை சுழற்றிக்கு உட்படுத்தல் :** ஈடுபடுத்தல் பங்காளரை சுழற்சிக்கு உட்படுத்துவது பரிச்சயமாவதைக் குறைப்பதுடன் கணக்காய்வுக்கு புதிய கண்ணோட்டத்தைக் கொண்டு வரவும் உதவுகிறது.

(2) **நிறுவன ரீதியான பரிசுக் கொள்கையையும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்தல் :** பரிசுகளை ஏற்றுக்கொள்வதில் பெயரளவு மதிப்பு வரம்பை நிர்ணயித்தல் மற்றும் அனைத்து அணி உறுப்பினர்களும் தொழில்சார் கணக்காளர்களின் நெறிமுறைக் கோவையைப் புரிந்துகொண்டு கடைப்பிடிப்பதை உறுதிசெய்ய தொழில்சார் நெறிமுறைகள் குறித்த பயிற்சியை வழங்குதல் உள்ளிட்ட பரிசுகளை ஏற்றுக்கொள்வது தொடர்பில் ஒரு தெளிவான கடுமையான கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

**(01½ புள்ளிகள் வீதம், 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

***பகுதி C முடிவு***